செ.வெ.எண் :06 /நவம்பர் நாள்: 04.11.2019

# இராமநாதபுரம் மாவட்டம்

## 7-வது பொருளாதாரக் கணக்கெடுப்பு பணிகளை

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (04.11.2019) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள், புள்ளியியல் துறையின் வாயிலாக மேற்கொள்ளப்படவுள்ள 7-வது பொருளாதாரக் கணக்கெடுப்பு பணிகளை துவக்கி வைத்தார்.

மத்திய அரசின் அறிவுறுத்தலின்படி இந்திய அளவில் 7-வது பொருளாதாரக் கணக்கெடுப்பு தொடங்கி நடைபெற்று வருகிறது. பல்வேறு உற்பத்தி, விநியோகம், விற்பனை மற்றும் சேவை நோக்கத்தோடு செய்யும் அனைத்து வகையான பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத நிறுவனங்களைப் பற்றிய கணக்கெடுப்பே பொருளாதாரக் கணக்கெடுப்பாகும். இந்த கணக்கெடுப்பில் குடும்பத் தலைவர் பெயர், குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை, கல்வித்தகுதி, வயது, இனம், சமூகப்பிரிவு, கைப்பேசி எண், செய்யும் தொழில், சுயதொழில் முதலீடுகள் மற்றும் வேலை பார்க்கும் நபர்களின் எண்ணிக்கை போன்ற விவரங்கள் சேகரிக்கப்பட உள்ளன.

அந்த வகையில் இராமநாதபுரம் மாவட்ட அளவில் 7-வது பொருளாதார கணக்கெடுப்பு பணிகளை இன்றைய தினம் (04.11.2019) மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். இக்கணக்கெடுப்பு பணிகளுக்காக இராமநாதபுரம் மாவட்டத்தில் 85 மேற்பார்வையாளர்கள் மற்றும் 548 களப்பணியாளர்களுக்கு இரண்டு கட்ட பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளது. மேலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 11 வட்டாரங்களையும், 618 கணக்கெடுப்பு நகர்ப்புற அலகுகளாக பிரிக்கப்பட்டு கணக்கெடுப்பு பணி நடைபெறவுள்ளது.

இக்கணக்கெடுப்பு விவரங்கள் முற்றிலும் மத்திய அரசின் பொருளாதாரத் திட்டமிடுதலுக்கு பயன்படுத்தப்படவுள்ளன. இந்த கணக்கெடுப்பை மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஊளுஊ என்ற நிறுவனமும், தமிழ்நாடு அரசின் பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறையும் இணைந்து மேற்கொள்கின்றன.

எனவே, கணக்கெடுப்பிற்கு வரும் கணக்கெடுப்பாளர்களிடம் தேவையான புள்ளி விவரங்களை வழங்கி ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

இந்நிகழ்வின்போது, பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை துணை இயக்குநர் திரு.கு.சுப்பிரமணியன், உதவி இயக்குநர்கள் திரு.உ.பாண்டியராஜன், திருமதி.ந.பூங்கொடி, விருதுநகர் தேசிய மாதிரி அலுவலக முதுநிலைக் கண்காணிப்பாளர் திரு.எ.கருணைமுருகன்ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**